சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 30.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | எ.த.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | சக்திபாலன் |
| தந்தை பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 38 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1-ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பு முதல் விசாரணை**

நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.05.2020 ஆம் தேதி மாலை 5.40

மணியளவில் பணியிலிருந்தபோது மலையூரை சேர்ந்த நடராஜன் மகன் 29 வயது மதிக்கத்தக்க (2 ம் எதிரி) கங்காதரன் என்பவர் தன்னை தெரிந்த 8 நபர்கள் தனது வீட்டின் அருகே மாலை 3.50 மணியளவில் மூங்கில் கம்பு, அரிவாள், கத்தி மற்றும் கல் போன்ற ஆயுதங்களால் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்த அவரை அப்போது பணியிலிருந்த மருத்துவர் திருமதி.பிரபா என்பவர் உள்நோயாளியாக சேர்த்திருந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அவருக்கு வலது கையில் 5x2 செ.மீ உராய்வு காயமும், வலது தோள்பட்டையில் 2x2 செ.மீ உராய்வு காயமும், இடது நெஞ்சுப்பகுதியில் 1 செ.மீ உராய்வு காயமும், இடது கையின் பின்புறம் 1 செ.மீ உராய்வு காயமும் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் அவரது காயங்களுக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் எ.த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

மேற்படி கங்காதரன் என்பவருக்கு தாங்கள் விபத்து பதிவேடு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கங்காதரனுக்கு ஏற்பட்ட காயங்கள் எந்த தேதியில் ஏற்பட்டுள்ளது என்பதை அறியும் வகையில் நான் காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.30 18:29:47 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.